**OS.NO.2/2017 PW-1**

**நாள்** : 12.12.2024

பெயர் : தேவதாஸ்

த/பெ : இருசப்பன்

**மனுவின் பேரில் அ.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை –**

தாவா சொத்து எந்த கிராமத்தில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ளது என்றால் புளியந்தாங்கல் கிராமத்தில் சர்வே எண் 268/4ல் அமைந்துள்ளது. ஆனால் உங்களுடைய தாவாவில் நரசிங்கபுரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது நரசிங்கபுரம் ஊராட்சியை தான் குறிக்கும். உங்கள் தரப்பில் தாக்கல் செய்யபபட்டுள்ள வாதுரையில் நரசிங்கபுரம் என்று மட்டும் தான் சொல்லப்பட்டுள்ளது புளியந்தாங்கல் என்று சொல்லபடவில்லை என்றால் அது புளியந்தாங்கலை தான் குறிக்கும். தாவா சொத்துக்கு உண்டான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் கிரய ஆவணம் மட்டும் தாக்கல் செய்திருக்கிறேன். பட்டாவுக்கு அப்ளை செய்திருக்கிறேன். வழக்கில் வழக்கறிஞர் ஆணையரை நியமிக்க நீங்கள் மனு செய்தீர்களா என்றால் ஆமாம். வழக்கறிஞர் ஆணையர் தாவா சொத்தை ஆய்வு செய்துவிட்டு உங்கள் அனுபவத்தில் இருக்கக்கூடிய சொத்து பாட்டை என்று தான் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் ஆமாம். பிரதிவாதி வசம் உள்ள சொத்து அவரது மாமனாரிடமிருந்து 1986ல் கிரயம் பெற்ற சொத்து என்றால் ஆமாம். 1986ல் கிரயம் பெற்ற சொத்தை பிரதிவாதி ஆனந்தன் தான் இது நாள் வரை அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம். நீங்கள் தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்றீர்கள் என்றால் ஒரு சுப்பிரமணியிடமிருந்து 2012ல் கிரயம் பெற்றேன்.

அந்த கிரய பத்திரத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் ஆமாம் தாக்கல் செய்திருக்கிறேன் அந்த கிரய பத்திரம் வா.சா.ஆ.1 ஆகும். அந்த வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் சொல்லபட்டுள்ள சொத்த அட்டவணையில் நரசிங்கபுரம் கிராமம் சர்வே எண் 268/4 என்றால் ஆமாம். நீங்கள சொல்வது போல் புளியந்தாங்கல் கிராமம் என்று வா.சா.ஆ.1 சொத்து அட்டவணையில் குறிப்பிடபடவில்லை என்றால் ஆமாம். சர்வே எண் 268/4க்கான வருவாய் ஆவணங்களையும் வழக்கில் முன்னிலைபடுத்தவில்லை என்றால் ஆமாம். பிரதிவாதி ஆனந்தன் உங்கள் வசம் உள்ள சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதை நிருபிப்பதற்கு எந்தவொரு வருவாய் துறை ஆவணங்களையும் நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பத்திரத்தில் உள்ள அளவு தான். பிரதிவாதி உங்கள் நிலத்தை எந்தவொரு ஆக்கிரமிப்பு செய்யவில்லை 1986லிருந்து அவருக்கு சொந்தமான நிலத்தை தான் அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று வருவாய் துறை ஆவணங்கள் மூலமாக நீங்கள் முன்னிலைபடுத்தாத சூழலில் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. எனவே செலவுத்தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/-***********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.